# தடாகத்துப் பாக்கள்!

## வெண்பாக்கள்!

கடவுளாய்ப் பெண்ணுருவம் காவலராய் வந்து
கிடந்த உடலெடுத்து கீர்த்தி உயிரை
பிடரி தனிலேற்றி பேரிடர் காத்த
சுடரடித் தீண்டி வணங்கு!

- குடந்தை மோகன், 11-11-2021

**பெண் காவலர்**

**காக்கிச்சட் டையில் கருணை வடிவத்தில்**
**காக்கும்நல் காவல்தெய் வம்பெண் வடிவத்தில்**
**ஆணுக்குப் பெண்யிளைப் பில்லை கவிக்கூற்று**
**பேணும்பெண் காவலர் போற்று.**

- குடந்தை கு.செல்லதுரை 11-11-2021

## விருத்தப்பா!

காவலர் பணி போற்றுவோம்!

**மானுடம் வாழ மடிதந்தார் போல்,**
**தானுமாய் நிறைந்தது காவல்பணி,**
**கனிந்தசீர் அன்பின் நிறைந்து,**
**கோனுயர் ஈசன் கூட்டிய செயலாய்,**
**கொண்டதோர் பணியில் நிறைந்தவள்,**
**வானகம் போற்ற நிறைந்து ,**
**வாழ்கவென நிறைந்து வாழ்த்துவோம்!**

- **கவிவளவன்** 11-11-2021